©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 155A] சென்னை, புதன்கிழமை, ஜூன் 22, 2016
ஆனி 8, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு-2047

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

**பக்கங்கள்**

சட்டமுன்வடிவுகள்:

| | | |
|---|---|---|
| எண் | **9/2016**—தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டம் .. .. | 2–5 |
| எண் | **10/2016**—தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம்.. | 7–9 |
| எண் | **11/2016**—தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. | 11–12 |

2016–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2016.**

**தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

**பகுதி – I**

**முன்னுரை**

குறுந்தலைப்பு

1. இந்தச் சட்டம் 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

**பகுதி – II**

1919–ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

28–ஆம் பிரிவிற்கான திருத்தம்

2. (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1919–ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான), 1919–ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சிச் சட்டத்தின் 28–ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது; தமிழ்நாடு சட்டம் IV /1919

**"28. மேயருக்கான தேர்தல்.–** (1) மாமன்றம், மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பு அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(2) மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் மேயராகத் தொடர்ந்திருப்பார், வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகாது.

(3) மேயர் பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுவதன் பேரில், மாமன்றமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு அடுத்து வருபவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர் எந்த நபருக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த நபர், அக்காலியிடம் ஏற்படாதிருந்திருக்குமாயின் அதனை வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டிருக்கக்கூடிய கால அளவு வரையில் பதவி வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதிக்கேடுடையவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவி காலம் முடிவுறுவதன்பேரில் அல்லது பிறவாராக மேயராக தாம் இருப்பது அற்றுப் போவதன்பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

44-AC பிரிவிற்கான திருத்தம்

3. 1919–ஆம் ஆண்டு சட்டத்தின் 44–AC பிரிவில், –

(1) ஓரத் தலைப்பில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 1–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) 12–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) 13–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) 14–ஆம் உட்பிரிவில் ''ஒரு துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு மேயர் அல்லது ஒரு துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**4.** 1919–ஆம் ஆண்டு சட்டத்தின் 59–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் (c) கூறில் ''மாமன்ற உறுப்பினர்'' அல்லது மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மாமன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 59–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**பகுதி–III**

**1971–ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்**

தமிழ்நாடு சட்டம் 15/1971. **5.** (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1971–ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான), 1971–ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்தின் 29–ஆம் பிரிவிற்காக பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:– 29–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**"29.மேயருக்கான தேர்தல்.–** (1) மாமன்றம் , மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பு அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(2) மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் மேயராகத் தொடர்ந்திருப்பார், வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகாது.

(3) மேயர் பதவியில் காலியிடம் ஏதுவும் ஏற்படுவதன் பேரில், மன்றமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு அடுத்து வருபவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர் எந்த நபருக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த நபர், அக்காலியிடம் ஏற்படாதிருந்திருக்குமாயின் அதனை வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டிருக்கக்கூடிய கால அளவு வரையில் பதவி வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதிக்கேடுடையவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவி காலம் முடிவுறுவதன்பேரில் அல்லது பிறவாராக மேயராக தாம் இருப்பது அற்றுப் போவதன்பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

**6.** 1971–ஆம் ஆண்டு சட்டத்தின் 48–AB பிரிவில், – 44-AB பிரிவிற்கான திருத்தம்

(1) ஓரத் தலைப்பில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 1–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) 12–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) 13–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) 14–ஆம் உட்பிரிவில் ''ஒரு துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு மேயர் அல்லது ஒரு துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**7.** 1971–ஆம் ஆண்டு சட்டத்தின் 66–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் (b) கூறில் ''மாமன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மாமன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 66–ஆம் பிரிவிற்கான திருத்தம்

## பகுதி–IV

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்

29–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

**8.** (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1981–ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான), 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சிச் சட்டத்தின் 29–ஆம் பிரிவிற்காக பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

**“29.மேயருக்கான தேர்தல்.–** (1) மாமன்றம், மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பு அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(2) மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் மேயராகத் தொடர்ந்திருப்பார், வரம்புரையாக இடைபட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகாது.

(3) மேயர் பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுவதன் பேரில், மன்றமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு அடுத்து வருபவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர் எந்த நபருக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த நபர், அக்காலியிடம் ஏற்படாதிருந்திருக்குமாயின் அதனை வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டிருக்கக்கூடிய கால அளவு வரையில் பதவி வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதிக்கேடுடையவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவி காலம் முடிவுறுவதன்பேரில் அல்லது பிறவாராக மேயராக தாம் இருப்பது அற்றுப் போவதன்பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

**9.** 1981–ஆம் ஆண்டு சட்டத்தின் 50–C பிரிவில், – (1) ஓரத் தலைப்பில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 1–ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) 12–ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) 13–ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) 14–ஆம் உட்பிரிவில் ‘‘ஒரு துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஒரு மேயர் அல்லது ஒரு துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

68–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** 1981–ஆம் ஆண்டு சட்டத்தின் 68–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் (b) கூறில் ‘‘மாமன்ற உறுப்பினர் அல்லது மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மாமன்ற உறுப்பினர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

நோக்க—காரண விளக்கவுரை

தற்போது, மாநகராட்சிகளுக்கான தேர்தல் கட்சிகளின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. சில மாநகராட்சிகளில் மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அவ்வளவாக மாநகர மேயருக்கு இல்லாத காரணத்தினால் மாமன்றங்கள் முறையாக செயல்படுவதில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மாநகர மேயருக்கு கிடைக்கும் பட்சத்தில் மாமன்றம் சிறந்த முறையில் செயல்படும் என்று கருதப்பட்டது. அதன் காரணமாக மாமன்ற உறுப்பினர்களால் மறைமுகமாக மாநகர மேயரை தேர்ந்தெடுப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அரசு மாநகராட்சி தொடர்பான சட்டங்களை பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

**2.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி.வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*
*செயலாக்கத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2016–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2016.**

**தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**பகுதி–I.**

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம், 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி II.**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம். .**

தமிழ்நாடு சட்டம் IV/1919 **2.** 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 46–AAA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— பிரிவு 46-AAAA. புதிதாக சேர்த்தல்.

"**46-AAAA. தேர்தல் தொடர்பான தனி வகை முறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்படவேண்டிய மன்றத்திற்கான முதல் தேர்தலுக்காக மாநகர கோட்டங்களில் ஆட்சி நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய கோட்டங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறே இருத்தல் வேண்டும்.''.

**பகுதி III.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971. **3.** 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 50–AA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— பிரிவு 50-AAA. புதிதாக சேர்த்தல்.

" **50- AAA. தேர்தல் தொடர்பான தனி வகை முறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்படவேண்டிய மன்றத்திற்கான முதல் தேர்தலுக்காக மாநகரப் பிரிவுகளில் ஆட்சி நிலவரைப் பகுதி, பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறே இருத்தல் வேண்டும்.''.

**பகுதி IV.**

**1981 – ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/1981. **4.** 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 52–AA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— பிரிவு 52-AAA. புதிதாக சேர்த்தல்.

“**52- AAA. தேர்தல் தொடர்பான தனி வகை முறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்படவேண்டிய மன்றத்திற்கான முதல் தேர்தலுக்காக மாநகரக் கோட்டங்களில் ஆட்சி நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய கோட்டங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறே இருத்தல் வேண்டும்.”.

**பகுதி V.**

**1920 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

பிரிவு 43-AAAA. புதிதாக சேர்த்தல்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

**5.** 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 43–AAA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“**43-AAAA. தேர்தல் தொடர்பான தனி வகைமுறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்பட வேண்டிய நகராட்சி மன்றங்களுக்கான முதல் தேர்தலுக்காக, நகராட்சி மன்றத்தின் பிரிவுகளில் ஆட்சி நிலவரைப் பகுதி, பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை, 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறு இருத்தல் வேண்டும்.”.

**நோக்க–காரண விளக்கவுரை**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான அடுத்த சாதாரண தேர்தல் 2016–ஆம் ஆண்டு அக்டோபர் 24–ஆம் தேதிக்கு முன்னர் நடைபெற்றாக வேண்டும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பிரிவுகளின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது மற்றும் அதனைத் தொடர்ந்து பிரிவுகளை வரையறை செய்வது போன்றவைகள் அந்தந்த மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள் மற்றும் பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. 2011–ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்கள் 2013–ஆம் ஆண்டே பெறப்பட்டது. தற்போது, 2011–ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஜூலை 15, 2016–ஆம் ஆண்டுக்குள் பிரிவுகளின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது மற்றும் பிரிவுகளை வரையறை செய்வது போன்றவற்றை மேற்கொள்வது அந்தந்த நகராட்சி ஆணையர்கள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு மிகுந்த சிரமங்களை ஏற்படுத்தியது என்று அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பிரிவுகளை வரையறை செய்யும் பணியானது ஜூலை 25, 2016–ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படவேண்டும் என்பதாலும், பிரிவுகளை வரையறை செய்யும் பணி மிகுந்த சிரமத்தையும், கால தாமதத்தையும் ஏற்படுத்தும் என்பதாலும், அது தற்போதைய தேர்தலை நடத்துவதற்கு இடையூறாக இருக்கும் என்பதாலும், தற்போது நடைபெற்ற சட்டப்பேரவைக்கான வாக்காளர் பட்டியலின் அடிப்படையில், பிரிவு வாரியான வாக்காளர் பட்டியல் தயாரிக்க இயலாது என்பதாலும், அரசானது தற்போது நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தலினை தற்போதுள்ள ஆட்சி நிலவரைப் பகுதி அல்லது பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய மன்ற உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினைக் கொண்டு நடத்தலாமென முடிவு செய்து அதற்கேற்றவாறு நகராட்சியச் சட்டங்களில் திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது.

**2.** இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*
*செயலாக்கத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2016—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்ககாரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2016.**

**1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2016—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

28—AAA எனும் புதிய பிரிவு புகுத்துதல்

2. 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 28—AA பிரிவுக்குப்பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:—

"**28—AAA தேர்தல் தொடர்பான சிறப்பு வகைமுறை.**— இந்தச் சட்டத்தில் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளில் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் என்ன அடங்கியிருந்த போதிலும் 2016—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்பட வேண்டிய கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கான முதல் தேர்தலுக்காக சிற்றொகுதிகளின் ஆட்சி நிலவரைபகுதி ஒவ்வொரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சியிலும் உள்ள சிற்றொகுதிகளின் எண்ணிக்கை அத்தகைய சிற்றொகுதி ஒவ்வொன்றினாலும் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியன 2016—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருக்கின்றவாறே இருத்தல் வேண்டும்.

## நோக்க காரண விளக்கவுரை

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 8,19, 26, 27 மற்றும் 28 ஆகிய பிரிவுகளின் வகையங்களின்படி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கான சிற்றொகுதிகளின் ஆட்சி நிலவரைப் பகுதி அவற்றினால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியன 2011–ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பு விவரங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டினை மொத்தப் பதவியிடங்கள் அல்லது பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு என்பதிலிருந்து ஐம்பது விழுக்காட்டிற்கு உயர்த்தியதைத் தொடர்ந்து, ஊராட்சிகளின் ஆய்வாளர்களாக இருக்கும் மாவட்ட ஆட்சியர்கள் 2016–ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்களை நடத்துவதற்காக 2011–ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பு விவரங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், மாவட்ட ஊராட்சிகளிலும் பெண்களுக்காகப் பதவியிடங்களையும், பதவிகளையும் ஒதுக்கீடு செய்வதைத் திருத்தியமைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். அதே போன்று 2016–ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களுக்காக 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான இடஒதுக்கீடு மற்றும் சுழற்சிமுறை இடஒதுக்கீடு) விதிகளின் வகையங்களின்படி, கிராம ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் பதவியிடங்களையும், பதவிகளையும் ஒதுக்கீடு செய்வதில் சுழற்சிமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். வேர் மட்ட அளவில் இத்தகைய மிகப்பெரும் பணிகளின் காரணமாக, 2011–ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் தொகை விவரங்களின் அடிப்படையில் அனைத்து கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றை மறுசீரமைப்பது மற்றும் பதவியிடங்கள், பதவிகளுக்கான சுழற்சிமுறை இடஒதுக்கீடு 2016 அக்டோபர் 24க்கு முன்பு நடத்துவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள ஊரக உள்ளாட்சிக்கான அடுத்த சாதாரண தேர்தல்களுக்கு முன்பு முடிக்க இயலாது. எனவே, ஊராட்சி உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது நிலவி வரும் சிற்றொகுதிகளின் ஆட்சி நிலவரைப்பகுதி, தொகுதிகளின் எண்ணிக்கை, அத்தகைய தொகுதிகளிலிருந்து தேர்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்சொன்ன ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களை நடத்துவதற்கு முடிவு செய்து மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 21/1994) திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.